நாள் 10.06.2024

அசல் வழக்கு எண் 186/2022

வா சா 1 சமுத்திர மகாராஜன்

சாட்சி சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டார்

3 ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை

வழக்கு சொத்து பூர்வீக சொத்து என்பதை காட்ட நான் எந்த ஆவணமும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் எனது வழக்கறிஞரிடம் அதற்கான நகலை கொடுத்திருக்கிறேன். வழக்கு 3 ம் தபசிலில் நானும் 3 ம் பிரதிவாதியும் தனித்தனியாக வீடு கட்டி வசித்து வருகிறோம் என்றால் சரிதான். 3 ம் பிரதிவாதி தந்தை என்ற முறையில் அவருக்கு நான் எந்த கடமையும் செய்யவில்லை என்று சொன்னால் அது தவறு. திருமணத்திற்கு முன்பு நான் அவர்களிடம் தான் எனது வருமானத்தை கொடுத்துஉள்ளேன். எனது திருமணத்தை 3 ம் பிரதிவாதி தான் செய்து வைத்தார் என்றால் நான் தான் செய்தேன். வழக்கு சொத்து 3 ம் பிரதிவாதிக்கு தனித்து பாத்தியப்பட்டது என்று சொன்னால் இல்லை குடும்ப சொத்து. நான் வழக்கை பொய்யாக தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. பிராதுப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.